**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 03 July-September 2024**

# சோ.தர்மன் புதினங்களில் வட்டார வழக்குகள் (மொழி)

முனைவர் பட்ட ஆய்வாளர் வே. அந்தோணி ராஜா

நெறியாளர் : முனைவர் மு. சாமிசுந்தரம்

பார்க்ஸ் கல்லூரி, ( தன்னாட்சி ), இணைப்பேராசிரியர்,

திருப்பூர்.

பார்க்ஸ் கல்லுரி ( தன்னாட்சி ), திருப்பூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வியலில் மொழிப் பயன்பாடு மிக முக்கிய மற்றும் தவிர்க்க முடியதாக கூறாகும். உலகெங்கும் வாழும் மக்களோடு தொடர்பை ஏற்படுத்தவும் அறிவியல் முதலான அனைத்து முன்னெடுப்புகளுக்கும் அடிப்படையாக அமைவது மொழி. மொழிகளால் பன்முகத்தன்மை கொண்டதில் இந்தியா என்றும் தனித்துவத்தோடு சிறந்து விளங்கி வருகிறது. அதில் மிக மூத்த மொழியைத் தன்னகத்தே கொண்டு தன்னிகரில்லாமல் திகழ்வது தமிழ்நாடுதான். தமிழ்நாட்டின் மொழிப் பயன்பாடும் ஒவ்வொரு வட்டாரத்திற்கு ஏற்ப வேறுபட்டு இருப்பதை அறிகிறோம். அன்றாட வழக்கத்தில் மக்களால் தவிர்க்க முடியாத பயன்பாட்டில் இவ்வட்டார வழக்கு உள்ளது. ஆனால் எழுத்து வழக்குப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்ததில் மிக முக்கிய இடத்தைப் பெறுவது சிறுகதை, நாவல் இலக்கிய வரவுகள்தான். அவ்வகையில் சூல் நாவலில் சோ.தர்மன் பயன்படுத்திய வட்டார வழக்குச் சொற்களை எடுத்தியம்புவதும் வட்டார வழக்கு சார்ந்த செம்பணி தொடர வேண்டுமென்ற நோக்கிலும் இக்கட்டுரை அமைகிறது.

**குறிச்சொற்கள்** : சமூகம், வாழ்வியல், வட்டாரம், புவியியல், இயற்கைச் சூழல், மொழி

**முன்னுரை**

உலகில் உள்ள பல்வேறு இடங்களில் வசிக்கும் மக்கள் தமிழ் மொழி பேசினாலும் அதில் மொழிக் கூறுகள் வேறுபாட்டுக் காணப்படுகின்றன. மேலும், ஒரே நிலப்பரப்பில் வாழும் மக்கள் பேசும் தமிழ் மொழியில் கூட பேச்சு வழக்கு இடம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் வேறுபடுவதைக் காணலாம். இங்ஙனம் வேறுபடுவதை வட்டார வழக்கு என்பர். தமிழ்நாட்டில் வட்டார வழக்குகள் பல இருப்பினும் திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி, சென்னை வட்டார வழக்குகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

வட்டார வழக்குகளை அடிப்படையாகக்கொண்டு இன்று பல படைப்பாளர்கள் எண்ணற்ற படைப்புகளைப் படைத்துக் கொண்டு இருக்கின்றனர். இதில் குறிப்பிடத்தக்க படைப்பாளர் சோ.தர்மன். அவரின் படைப்பான சூல் நாவல் திருநெல்வேலி வட்டார வழக்கில் படைக்கப்பட்ட நாவலாகும். இந்நாவலில் மக்கள் பொதுத்தளங்களில் பேசப்படும் பேச்சு வழக்கினைக் கொண்டே நாவலைப் படைத்துள்ளார் வட்டார வழக்கின் பயன்பாடு குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**வட்டார மொழி**

வட்டார மொழி என்பது ஒரு பொது மொழியில் இருந்து வேறுபட்டு ஒரு வட்டாரத்தில் அல்லது புவியியல் மக்களால் பேசப்படும் வழக்குகள் எனலாம் வட்டார மொழி வழக்குகள் அந்த பொது மொழியில் ஒரு பகுதியைத் தவிர வேறு மொழியாகக் கருதப்படுவதில்லை. பொதுவாகப் பல்வேறு வட்டார மொழிகளைக் கொண்டு ஒரு மொழியினர் பேச்சிலும் எழுத்திலும் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருக்கும். பொது மொழிக்கும் வட்டார மொழி வேறுபாடுகள் இடத்தில் ஒரு வட்டார மொழி ஒரு தனி மொழியாக மாறுவது வட்டார மொழியாகும்.

**“பொது மொழியிலிருந்து ஒலிப்பு முறையாலும் சொற்களாலும் இலக்கண அமைப்பாலும் சற்றே வேறுபாடு உடையதும் நாட்டில் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியைச் சார்ந்தவர்கள் மட்டும் பேசப்படுவதுமான மொழி வகை.” (ப.எண் 894) கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி**

தமிழகத்தில் மட்டுமல்லாது உலகளவில் தமிழில் 22 வட்டார வழக்குகள் இருப்பதாக “என்தனலாக் என்ற உலக மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம்” தெரிவிக்கின்றது.

**இலக்கண நூல்களில் வட்டார மொழிப் பாகுபாடு**

தமிழ்மொழியில் வட்டார நீர் பற்றிய செய்திகளைத் தருபவர் தொல்காப்பியர் அவர் தமது தொல்காப்பியத்தில் இரண்டாவதாக அமைந்த சொல்லதிகாரத்தில் கிளைமொழி சொற்களாகக் குறிப்பிடுகின்றார். இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று நான்கினையும் குறிப்பிடுகின்றார்.

**இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்**
**என்று அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்யே. (தொல்.சொல்:397)**

இந்நான்கு வகை சொற்கள் திசைச் சொல் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது கிளை மொழியே (வட்டார மொழி) என்று மொழியியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியர் திசைச்சொல் பற்றி,

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தமகுறிப்**
**பினவே திசைச்சொல் கிளவி. (தொல். சொல்:400)**

என்று கூறுகின்றார். செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த 12 கொடுந்தமிழ் நாடுகளிலும் தகுதி குறித்த பொருள்களை விலகி நிற்கும் சொற்கள் திசைச்சொல் எனப்படும் என்று நூற்பாவின் பொருள். மேலும் நன்னூல்,

**செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற்று இரண்டினில் தமிழ் ஒழி நிலத்தினும்**
**தம் குறிப்பினவே திசைச்சொல் என்ப. (நன்னூல்: 273)**

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த 12 பகுதிகளிலிருந்தும் பதினெட்டு மொழி பேசும் நாடுகளில் தமிழ் பேசும் பகுதி அல்லாத பிற பதினெழு நிலங்களில் உள்ள மொழிகளில் இருந்தும்

தமிழ்மொழியில் கலந்து வரும் சொற்கள் திசைச் சொற்கள் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

பன்னிரெண்டு நிலங்கள்:

1. தென்பாண்டி நாடு
2.குட்டநாடு
3.குடநாடு
4.கற்கா நாடு
5.வேணாடு
6.பூழி நாடு
7. பன்றி நாடு
8.அருவா நாடு
9. அருவா வடதலை நாடு
10. சீத நாடு
11. மலாடு
12. புனல் நாடு

என்பவை பன்னிரண்டு நாடுகள் ஆகும். இடைக்காலத்தில் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோரும், நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர் ஆகியோரும் அந்நாடுகள் எவை எனக் குறிப்பிடுகின்றனர்.

**மொழியியல் ஆய்வாளர்கள் பார்வையில் வட்டார மொழி:**

மொழியானது மனிதன் வாழுமிடம் தட்பவெப்பநிலை அன்றாட வாழ்க்கை ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. இயற்கைச் சூழல், போக்குவரத்துக் காரணமாக, ஒரே மொழி பேசும் குழுவினரிடையே மொழியை ஒலிப்பதில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனால் ஒரு மொழியிலிருந்து கிளை மொழிகள் தோன்றுகின்றன. இத்தகைய கிளை மொழிகள் வட்டார வழக்கு என்று அழைக்கப்படுகின்றன. சங்க காலத்திலேயே வட்டார வழக்கு இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

பன்றி நாடு, குட்ட நாடு, குடநாடு, அருவா வடதலை நாடு என்று செந்தமிழ்சேர் பன்னிருநிலம் என்ற நாட்டுப் பிரிவினையானது வட்டார அடிப்படையில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஏனெனில், பின்னர் உரையாசிரியர்கள் ஒரு உயிரினம் அல்லது ஒரு பொருளைக் குறிப்பிடும் பெயரானது நாட்டினுக்கு நாடு வேறுபடுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர். இன்று தமிழ்நாட்டினை வட்டார வழக்கு மொழி அடிப்படையில் ஐந்து பிரிவுகளாக மொழியியலாளர் பிரிக்கின்றனர். இவ்வாறு பிரிக்கப்படும் பிரிவினை நுட்பமாக ஆராய்ந்தால், ஒவ்வொரு பிரிவினுக்குள்ளும் குறைந்தபட்சம் மூன்று பிரிவுகள்

இருப்பதனைக் கண்டறிய முடியும். நெல்லை வழக்குத் தமிழுடன் குமரி மாவட்டத் தமிழ் வேறுபடுகிறது. குமரி மாவட்டத் தமிழுடன் நாஞ்சில் நாட்டுத் தமிழ் வேறுபடுகிறது.

இவ்வாறு பல்வேறு வட்டார வழக்குகள் நிரம்பிய தமிழகத்தினைக் காணமுடிகின்றது. எழுத்து வழக்கென்னும்போது தமிழகமெங்கும் பொதுத் தமிழே வழக்கிலுள்ளது. பேச்சு வழக்கு வட்டாரந்தோறும் மாறுபடும் நிலையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் தனிப்பட்ட சொற்களஞ்சியத்தினைத் தொகுக்க முடியும். இது தவிர, கரிசல் வட்டார வழக்குச் சொற்கள், கொங்கு வட்டாரச் சொற்கள், செட்டிநாட்டு வழக்குச் சொற்கள், நாஞ்சில் நாட்டுச் சொற்கள் என்று ஏதோ ஒரு அடையாளத்தினை முன்னிறுத்தி, ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியை வட்டாரமாக அடையாளப்படுத்துவது சொற்கள் சார்ந்தது ஆகும்.

இத்தகைய வட்டாரங்களில் புழங்கும் வட்டார வழக்குச் சொற்கள் தொகுக்கப்பட்டு, தனி நூலாக அண்மையில் வெளியாகியுள்ளன. இவை போன்ற நூல்களும் கள ஆய்வின் மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும் சேகரிக்கப்படும் சொற்களும் சொல் மூலங்களாக விளங்குகின்றன. **(மொழி பெயர்ப்பில் - சொல்லாக்கம்.)**

**(சூல்) நாவலில் வட்டார மொழிகள்**

**அஞ்ஞா** - அம்மாவை ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்அஞ்ஞா அழைக்கின்றனர்.
**(ப.எண் 5 ) - கி.ரா வின் வட்டார வழக்கு சொல்லகராதி**

**அபசகுணம்** - நல்ல காரியங்களை பேசும்போது குறுக்கே அபசகுனமாக பேசாதே
**ஆசுவாசம்** - கவலையும் நீங்கியதும் கிடைக்கும் ஆறுதல்
**பரம்பரை** - தொடர்ந்து வரும் சந்ததி
**கெச்சட்டம்** - பறவைகளின் சந்தோசமான ஆரவாரம்
**கோளாறு** - பாதிக்கின்ற வகையில் ஏற்படுகின்ற சிக்கல்
**கோளாறு** - திறமை ஆலோசனை
**ஜனம்** - மக்கள்
**ஜாடை** - முகபாவம் சைகை முதலியவற்றால் குறிப்பாகத் தெரிவித்தல்
**ஜாடை** - சாயல்
**சலங்கை** - ஒலி எழுப்பக் கூடிய சிறுசிறு மணிகளால் இணைத்தப்பட்டை
**சாயங்காலம்** - மாலை நேரம்
**ஜாஸ்தி** - அதிகம்
**பட்சி** - பறவை
**கஞ்சி** - சோறு வெந்த பிறகு வடித்து எடுத்த நீர்
**கலையம்** - கஞ்சி கூல் முதலியவை குடிக்க பயன்படுத்தும் பாத்திரம்
**வசவு** - திட்டு

**சம்சாரி** - நிலத்தில் பயிரிடுபவர் விவசாயி

**விஸ்தாரம்** - பேச்சு எழுத்து குறித்த வகையில்

**கச்சை** - பாதிரியார் அங்கியின் இடுப்பு பட்டை

**வாரை** - நீண்ட பருத்த மரம்

**நோட்டம்** - மதிப்பீடு அல்லது தெரிந்துகொள்ளும் நோக்கம் கொண்ட பார்வை

**புஷ்டி** - ஊட்டத்துடன் கூடிய பருமன்

**தீவட்டி** - வெளிச்சத்திற்காக பிடிக்கப்படும் தீப்பந்தம்

**பஸ்பம்** - சாம்பல்

**முற்றம்** - வீட்டின் முன்பகுதியில்

**வாசலை** - ஒட்டிய திறந்த வெளிப் பகுதி

**ஊரணி** - கிராமபுறத்தில் குடிநீருக்கான குளம்

**வாப்பா** - தமிழ் பேசும் முஸ்லிம்களிடையே அப்பா என்று அழைப்பது

**சாத்திரம்** - சாஸ்திரம்

**சன்னிதி** - கோவிலில் இறைவன் இருக்கும் இடம்

**நாமம்** - பெயர்

**வாஞ்சை** - பரிவு கலந்த அன்பு

**பண்டாரம்** - கிராம சிறு தெய்வ கோயில் பூசாரி

**படப்பு** - வைக்கோற் போர் கொல்லை சங்கதி நடைபெறும் செயல்

**சாமம்** - இரவு அல்லது நள்ளிரவு

**முந்தி** - சேலை போன்றவற்றின் ஓரப் பகுதி

**அழிச்ச்சட்டம் -** வம்பு தனம் அழித்தல் பண்டுவம் மருத்துவம்

**அப்புராணி** - கல்மிஷம் இல்லாத சாது

**வாஞ்சனை** - அன்பு பாசம் பிரியம்

**அரவம்** - பாம்பு

**அரவம்** - ஒலி

**ஸ்பரிசம்** - தொடு உணர்ச்சி

**அந்தகாரம்** - காரிருள்

**சவடால்** - வீண் பேச்சு ஆரவாரப் பேச்சு

**சீதனம்** - தாய் வீட்டிலிருந்து கொண்டு வரும் பொருள்

**அனுதாபம்** - இரக்கம் வருத்த உணர்வு ரூபம் வடிவம் உருவம்

**தபசு** - தியானம் தவம்

**அசரீரி** - வானத்திலிருந்து எழுவதாக கூறப்படும் குரலில்

**சன்னிதி** - கோவிலில் இறைவன் இருக்கும் இடம்

**நாமம்** - பெயர்

**வாஞ்சை** - பரிவு கலந்த அன்பு

**பண்டாரம்** - கிராம சிறு தெய்வ கோயில் பூசாரி

**படப்பு** - வைக்கோற் போர் கொல்லை சங்கதி நடைபெறும் செயல்

**சாமம்** - இரவு அல்லது நள்ளிரவு

**முந்தி** - சேலை போன்றவற்றின் ஓரப் பகுதி

**அழிச்ச்சட்டம்** - வம்பு தனம் அழித்தல் பண்டுவம் மருத்துவம்

**அப்புராணி** - கல்மிஷம் இல்லாத சாது

**வாஞ்சனை** - அன்பு பாசம் பிரியம்

**அரவம்** - பாம்பு

**அரவம்** - ஒலி

**ஸ்பரிசம்** - தொடு உணர்ச்சி

**அந்தகாரம்** - காரிருள்

**சவடால்** - வீண் பேச்சு ஆரவாரப் பேச்சு

**சீதனம்** - தாய் வீட்டிலிருந்து கொண்டு வரும் பொருள்

**அனுதாபம்** - இரக்கம் வருத்த உணர்வு ரூபம் வடிவம் உருவம்

**தபசு** - தியானம் தவம்

**அசரீரி** - வானத்திலிருந்து எழுவதாக கூறப்படும் குரலில்

**முடிவுரை**

தமிழ்நாட்டில் பல்வேறு வட்டார வழக்குகள் புழக்கத்தில் உள்ளன. வட்டார வழக்கினைக் கொண்டு வாழும் மக்களை அடையாளம் காணலாம். தமிழ் எழுத்துலகில் கோலோச்சும் பல எழுத்தாளர்களும் தங்களது படைப்புகளில் வட்டார வழக்குகளை அதிகம் கையாளுகின்றனர். அங்ஙனம் திருநெல்வேலி வட்டார வழக்கினைத் தனது சூல் நாவலில் பயன்படுத்திய சோ.தர்மனின் வட்டாரச் சொல்லாடலை நாவல் நெடுகிலும் காணமுடிகிறது. ஒரு பகுதியில் பேசப்படும் வட்டாரச் சொற்களை பிற பகுதியினரும் விளங்கிக் கொள்வதற்காக வட்டாரச் சொல்லகராதிகள் உருவாக்கப்படுகின்றன. இஃது தமிழ் மொழியின் வளத்திற்கு வளம் சேர்ப்பதாகவே அமைகிறது. நடப்பு நிகழ்வுகளைப் படைப்பாக்கம் செய்வதும் படைப்பாக்கத்தின் வழியே சொல் வளங்களை மிகுதியாகப் பெருவெளிக்குக் கொண்டு வருவதுமான ஆக்கங்கள் பல தொடர்ந்திட வேண்டும்.

**துணைநூற்பட்டியல்** :

**முதன்மை நூல்** :

சோ. தர்மன், சூல், அடையாளம் பதிப்பகம், 2016,திருச்சி

**பார்வை நூல்கள்** :

1. கி. ராஜநாராயணன், கரிசல் வட்டார வழக்கு அகராதி, அகரம் வெளீயீடு, 1982, சிவகங்ககை

2. பெருமாள் முருகன், கொங்கு வட்டார சொல்லகராதி, குருத்து வெளியீடு, 2000, ஈரோடு